பாதுகாப்பு அமைச்சு

# இலங்கை கடற்படை

## வழங்கல் அறிவித்தல்

### இலங்கை கடற்படைக்கு எல்டோ ஆப்டிகல் உபகரணங்கள் 15 ஐ கொள்வனவு செய்தல்

### ஒப்பந்த இலக்கம் : MOD/SLN/02/2021

1. இலங்கை கடற்படை சார்பில் பாதுகாப்பு அமைச்சரவையின் வழங்கல் குழுவின் தலைவரால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை கொள்முதல் செய்ய மனு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி தகுதியான மற்றும் தகைமைகளை உடைய மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

   இலங்கை கடற்படைக்கு எல்டோ ஆப்டிகல் உபகரணங்கள் 15 ஐ [15 Nos of Stabilized Electro Optical Devices (EODs)] கொள்வனவு செய்தல். (மனு ஆவணத்தில் விரிவான விவரக்குறிப்புகள் மற்றும் தொடர்புடைய நோக்கம் ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன)

2. வழங்குனர்களால் தொழில்நுட்ப விவரக்குறிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ளபடி செயல்பாட்டு நிலை சான்றிதழுடன் தனது மனுக்களை சமர்ப்பிக்க வேண்டும். வழங்குனரினால் அனைத்து பொருட்கள், பாகங்கள், வரைபடங்கள், திட்டங்கள், தொழில்நுட்ப தகவல்கள் மற்றும் நிறுவல் மற்றும் பரிமாற்றத்திற்கு வழங்குனர்கள் ஒப்புக்கொள்ள வேண்டும்.

3. மனுக்கோரலானது தேசிய மனுக்கோரல் போட்டி விதிமுறைக்கமைய இடம்பெறும்.

4. அதிக உணர்திறன் கொண்ட ஆப்டிகல் ஆப்டிக்ஸ் உபகரணங்கள் தயாரிப்பில் பத்து (10) வருட அனுபவம் உள்ள வழங்குனர்களிடமிருந்து மனுக்கள் கோரப்படுகின்றன. உள்ளூர் மனுதாரர்கள் குறைந்தது ஐந்து வருட வணிகப் பதிவை கொண்டிருக்க வேண்டும். வெளிநாட்டு மனுதாரர்கள் முறையாக நியமிக்கப்பட்ட (அங்கீகரிக்கப்பட்ட) உள்ளூர் பிரதிநிதிகள் மூலம் தங்கள் மனுக்களை சமர்ப்பிக்க வேண்டியதுடன், மனுதாரர்கள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கு ஒத்ததாக தங்கள் மனுக்களை சமர்ப்பிக்க வேண்டும்.

   அ). மேற்கூறிய உள்ளூர் முகவர்களுக்கு அந்த வியாபாரம் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடங்களுக்குள் இலங்கையில் வியாபாரத்தை பதிவு செய்திருக்க வேண்டும்.

   ஆ). மனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட உயர் உணர்திறன் கொண்ட எல்டோ ஆப்டிகல் உபகரணங்களுக்காக உற்பத்தியாளரால் வழங்கப்பட்ட தயாரிப்பு சான்றிதழ் (OEM சான்றிதழ்) ஐ சமர்ப்பித்தல் வேண்டும்.

   இ). உற்பத்தியாளரால் வழங்கப்பட்ட அங்கீகார சான்றிதழை மனுதாரர் உள்ளூர் முகவரிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

5. தகுதிவாய்ந்த மனுதாரர்களுக்கு மேற்கண்ட கொள்வனவுகளுக்கு சட்டப்பூர்வ உரிமையும், மனுதாரர் 1987 ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தங்கள் எண் 03 ன் கீழ் சரியான வணிகப் பதிவையும் பெற்றிருக்க வேண்டும். (உள்ளூர் மனுதாரர்களுக்கு மட்டும்) மேலும் மனு ஆவணங்களை சமர்ப்பிக்கும் போது மனுதாரர் வணிக பதிவு சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டியதுடன், இது தொடர்பான மேலதிக விபரங்கள் மனு ஆவணத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. மேலும் 1987 ஆம் ஆண்டின் 03 வது பொது ஒப்பந்தச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சில முக்கிய மேற்கோள்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

   "எந்தவொரு மனுதாரரின் சார்பாக ஒரு முகவர் அல்லது துணை முகவராக, பிரதிநிதி அல்லது பெயரளவிலான முகவராக செயல்படும் எந்தவொரு நபரும் பந்தி 10 இன் படி தன்னையும் பொது ஒப்பந்தத்தையும் பதிவு செய்து, பந்தி 6 இன் கீழ் பதிவாளருக்கு தகவல் அளிக்க வேண்டும்."

   "எந்தவொரு மனுதாரரின் சார்பாக ஒரு முகவர் அல்லது துணை முகவராக, பிரதிநிதி அல்லது பெயரளவிலான முகவராக செயல்படும் சந்தர்ப்பத்தில் அவரினால் மேல்குறிப்பிடப்பட்ட விடயங்களின் கீழ் தானும் சம்பந்தப்பட்ட பொது ஒப்பந்தத்தில் பதிவு செய்ய முதலில் பதிவாளருக்கு முகவர் அல்லது துணை முகவராக, பிரதிநிதி அல்லது பெயரளவிலான முகவராக செயல்படுதல் தொடர்பான சான்றிதழை முன்வைக்க வேண்டும்.

   "இந்த சட்டத்தின்படி, மனுதாரர் தகுந்தபடி மனு ஆவணங்களுடன் பதிவு ஆவணங்களை சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படுகிறார்.

6. தயாரிப்பு நிலைத்தன்மையை உறுதிசெய்ய, தகுதிவாய்ந்த மனுதாரர் சர்வதேச தர சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும்.

7. நிதி திறன் மற்றும் பிற தேவைகள்: கடந்த ஐந்து (05) ஆண்டுகளில் மனுதாரரின் சராசரி ஆண்டு வருமானம் ரூ. 750,000,000.00 க்கு சமமாக அல்லது குறையாமல் இருத்தல் வேண்டும்.

8. ஆர்வமுள்ள மனுதாரர்களுக்கு பணிப்பாளர் கடற்படை வெளிநாட்டு கொள்வனவுகள், இல.593, மேல் செத்தம் வீதி, கொழும்பு 01 எனும் விலாசத்தில் தொலைபேசி இலக்கம் +94-112445066, +94-117190000 (நீட்டிப்பு- 12331) பெக்ஸ் இல- +94-112448725 அல்லது மின்னஞ்சல் முகவரி- nhqssofp@navy.lk இன் மூலம் மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளக்கூடியதுடன், **2021 செப்டம்பர் மாதம் 10** ஆம் திகதி தொடக்கம் **2021 ஒக்டோபர் மாதம் 25** ஆம் திகதி வரை கிழமையின் வேலை நாட்களில் **மு.ப 0900 மணி** தொடக்கம் **பி.ப 03.00 மணி** வரை மேலதிக விபரங்களை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் எவ்வித கட்டணச்செலுத்துகையும் இன்றி பெற்றுக்கொள்ளமுடியும்.

   விலாசம்: வழங்கல் பிரிவு,
   பாதுகாப்பு அமைச்சு,
   பாதுகாப்பு தலைமையக வளாகம்
   ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டை
   இலங்கை.

9. மனுதாரர் அல்லது அவரின் உள்ளூர் பிரதிநிதி சட்ட வாரியம், அரச நிறுவனங்கள் அல்லது அரச அனுசரனை நிறுவனங்களில் குற்றப்பத்திரிக்கையில் இடம்பெற்றிருப்பின் ஒப்பந்தத்திற்கு மனுக்களை வழங்கும் தகுதியற்றவராவீர்கள்.

10. மனுதாரர்களால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூல விண்ணப்பத்தை வழங்குவதன் மூலம் மற்றும் பாதுகாப்பு அமைச்சிக்கு மீள் செலுத்தப்படாத கட்டணமான ரூபா. 100,000.00 ஐ காசாக செலுத்துவதன் மூலம் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட மனு ஆவணத்தொகுப்பை **2021 செப்டம்பர் மாதம் 10** ஆம் திகதி தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம்.

    விலாசம்: வழங்கல் பிரிவு,
    இரண்டாம் மாடி,
    பாதுகாப்பு அமைச்சு,
    பாதுகாப்பு தலைமையக வளாகம்
    ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டை
    இலங்கை.

    தொலைபேசி இலக்கம் : 00-94-11-2390719
    பெக்ஸ் : 00-94-11-2390720
    மின்னஞ்சல் முகவரி : procurement@defence.lk

11. மனுக்களை **2021 ஒக்டோபர் 26 ஆம்** திகதி **மு.ப 1100** மணிக்கு அல்லது அதற்கு முன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு முன்வைக்க வேண்டும்.

    விலாசம்: கணக்காளர் (வழங்கல்)
    பாதுகாப்பு அமைச்சு,
    பாதுகாப்பு தலைமையக வளாகம்
    ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டை
    இலங்கை.

12. மனுக்களை ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனேயே (**2021 ஒக்டோபர் 26 ஆம் திகதி 1100 மணிக்கு**) மனுதாரர் அல்லது அவர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதியின் முன்னிலையில் மனுக்கள் திறக்கப்படும். நேரம் தாழ்த்தி முன்வைக்கப்படும் மனுக்கள் மற்றும் மின்னஞ்சல் முறை மூலம் முன்வைக்கப்படும் மனுக்கள் நிராகரிக்கப்படும்.

13. மனுதாரர்களின் மனுக்கள் **2022 மார்ச் 21** ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

14. அனைத்து மனுக்களும் இலங்கை ரூபாவில் **இருநூற்று இருபது இலட்சம்** பெறுமதியான (ரூபா.22,000,000.00) இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட வணிக வங்கியொன்றினால் தேவைக்கேற்ப ஒப்பந்தங்கள் இல்லாமல் பெற்றுக்கொண்ட மனுக்காப்புறுதியுடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டியதுடன், மனுக்காப்புறுதிகள் **2022 ஏப்ரல் மாதம் 18** ஆம் திகதி வரை செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

15. அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையான வழங்கல் குழுவின் முடிவே இறுதி முடிவாவதுடன், எந்தவொரு திருத்தங்களையும் மேற்கொள்ளும் அதிகாரம் பெறுனருக்கு உண்டு.

16. மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்,

    அ. முகவரி : பிரதான கணக்காளர் I
    பாதுகாப்பு அமைச்சு,
    பாதுகாப்பு தலைமையக வளாகம்
    ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டை
    இலங்கை.
    தொலைபேசி இலக்கம் : 00-94-11-2390719
    பெக்ஸ் : 00-94-11-2390720
    மின்னஞ்சல் முகவரி : procurement@defence.lk

    ஆ. முகவரி : பணிப்பாளர் கப்பல் வெளிநாட்டு கொள்முதல்
    இலங்கை கடற்படை
    த.பெ. இல. 593
    மேல் செத்தம் வீதி
    கொழும்பு 01
    தொலைபேசி இலக்கம் : 00-94-11-2445066, 00-94-11-7190000 (நீட்டிப்பு - 12331)
    பெக்ஸ் : 00-94-11-2448725
    மின்னஞ்சல் முகவரி : nhqssofp@navy.lk

17. மனுக்கள் தொடர்பான கூட்டம் **2021 செப்டம்பர் 28** ஆம் திகதி **பி.ப 1400** மணிக்கு இலங்கை கடற்படை தலைமையகம், கொழும்பு 01 இல் இடம்பெறும்.

**தலைவர்**
**அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட நிலையான கொள்முதல் குழு,**
**பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக வளாகம்,**
**ஸ்ரீ ஜெயவர்தனபுர, கோட்டே,**
**இலங்கை.**